1980 ஜூலை 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி:—

''மானியக் கோரிக்கை எண். 19 பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 48,01,52,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

[பிற்பகல் 2.50]

அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஏற்கனவே பேரவைக்கு அறிவிக்கப்பட்ட நிகழ்ச்சிகளில் கீழ்க் கண்ட மாறுதல்கள் செய்யப்படுகின்றன:

(1) 25-7-1980 வெள்ளிக்கிழமையன்று எடுத்துக் கொள்வதாக அறிவிக்கப்பட்டிருந்த 31-பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன், 44 எழுதுபொருள், அச்சுத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் 22-7-1980 செவ்வாய் கிழமை அன்று எடுத்துக்கொள்ளப்படும்.

(2) 22-7-1980 செவ்வாய்க்கிழமை எடுத்துக்கொள்வதாக அறிவிக்கப்பட்ட 9-மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள், 11-மாவட்ட நிர்வாகம், 15-காவல்துறை, 16-தீயணைப்புப் பணிகள், 37-பொதுப் பணிகள், கட்டிடங்கள், 38-பொதுப் பணிகள்-பணியாளரும், கருவிகளும் இயந்திர சாதனங்களும், 51-பொதுப் பணிகள்-கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு ஆகிய மானியக் கோரிக்கைகள் 25-7-1980 வெள்ளிக்கிழமையன்று எடுத்துக்கொள்ளப்படும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, நாளை காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2.52 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.